கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 02.04.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் திறன் வளர்ப்பு தொடர்பான ஒரு நாள் அனுபவப் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் மார்ச் 29, 2025 அன்று வேளாண் உயிரியல் தொழில்நுட்பத்தின் திறன் வளர்ப்பு தொடர்பான ஒரு நாள் அனுபவப் பயிற்சிவகுப்பு தாவர மூலக்கூறு மற்றும் உயிர் தொழில்நுட்ப மையத்தில் நடைபெற்றது. இதில் பி எஸ் ஜி கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியின் முதுநிலை படிப்பு மற்றும் பிஎஸ்சி கலை மற்றும் அறிவியல், கல்லூரி உதவி பேராசிரியர்களும் பங்கு பெற்று பயனடைந்தனர்.

முனைவர். சு. மோகன் குமார், பேராசிரியர் மற்றும் திட்ட இயக்குனர் (COXBIT) துவக்க நிகழ்ச்சியில் வரவேற்புரை கூறி பயிற்சியின் முக்கியத்துவத்தை விளக்கினார். மேலும் இந்த நாள் பயிற்சி வகுப்பு மாணவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு ஒரு அடித்தளமாக செயல்பட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கும், புதிய கண்ணோட்டங்களை வழங்குவதற்கும் உதவுவதாக அவர் தெரிவித்தார்.

முனைவர். வே. ராஜன் பாபு உதவி பேராசிரியர், பயிற்சி முக்கிய அம்சங்களை விளக்கி தொழில்முனைவுத்துறையில் உள்ள வாய்ப்புகள் மற்றும் நடைமுறை பயன்பாடுகளை எடுத்துரைத்தார்.

முனைவர். சரண்யா, உயிரி தகவலியல், உதவி பேராசிரியர், உயிரி தகவலியல் தரவுகளை புரிந்து கொள்ளுதல், கட்டமைப்பு மாதிரிகள் உருவாக்கம் மற்றும் மரபணுநிலை தொடர்புகள் பற்றிய ஆராய்ச்சிகளையும் அதன் பயன்பாடுகளை மருத்துவம், பயிர் மேம்பாடு மற்றும் செயல்பாட்டு உயிரியல் துறைகளில் விரிவுரைத்தார்.

முனைவர். அமிர்தம், உதவி பேராசிரியர், செயல்பாட்டு உணவுகளின் முக்கியத்துவம் மற்றும் உணவு சார்ந்த ஊட்டச்சத்து தொழில் முனைவுத்துறையில் உள்ள வாய்ப்புகளை குறித்து விளக்கினார்.மேலும் இத்துறையில் தொடக்க வணிக நிறுவனங்களை உருவாக்குவதற்கான உத்திகளை பற்றியும் கூறினார்.

முனைவர். ரேணுகா, பேராசிரியர் தாவர திசு வளர்ப்பு ஒரு வணிக வாய்ப்பாக பயன்படுத்துவதை குறித்து பேசினார். அலங்கார தாவர மலர்கள் மற்றும் தோட்டக்கலை, வாழை, கரும்பு, மூங்கில் மற்றும் தேக்கு போன்ற தாவரங்களை திசு வளர்ப்பு மூலம் வேளாண் தொழில்முனைவு துறையில் வளர்ச்சி பெறக்கூடிய வாய்ப்புகளை கூறினார். தாவர திசு வளர்ப்பு தொழிலை ஒரு சர்வதேச அளவில் வெற்றிகரமான தொழில் முனைவர் துறையாக உருவாக்குவதற்கான முக்கியமான ஏற்றுமதி உத்திகள் மற்றும் நடைமுறை நடவடிக்கைகளை பற்றியும் விளக்கினார்.

திரு. தினேஷ் குமார் துணைத் தலைவர், startupTNபுதிய தொழில் முனைவோருக்கு தமிழ்நாட்டில் ஸ்டார்ட்அப்களை வளர்ப்பதற்கும், புதுமையான சூழலை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட அமைப்புகளையும், புதுமைகளை ஊக்குவித்தல், ஸ்டார்ட்அப்களுக்கு நிதியுதவி மற்றும் வழிகாட்டுதல் பங்களிப்பை பற்றி குறித்து பேசினார்.

முனைவர் ஈ. கோகிலா தேவி பேராசிரியர் மற்றும் தலைவர் நன்றியுரை வழங்கி உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் உயிரி தொழில்நுட்பம் மேம்பாட்டிற்கு உருவாக்கப்பட்டுள்ள புதிய அடித்தள வசதிகளை பற்றி கூறி இவை வேளாண் உயிரியல் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திறனை மேம்படுத்துவதற்கு முக்கிய பங்காற்றும் என்றும் குறிப்பிட்டார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***